மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உமாநாத் அவர்களைப் பேச அனுமதித்தால் திரு. சுப்பு அவர்களும் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் திரு. உமாநாத் அவர்களை உட்காரச் சொன்னேன். அவர்கள் உட்கார்ந்து விட்டார்கள். அவர்களே உட்கார்ந்து விட்டபோது நீங்கள் ஏன் இன்னும் வற்புறுத்திக் கொண்டே இருக்கிறீர்கள், என்னிடம் வைராக்கியமாக இருக்க வேண்டும் என்று நினைத்துத்தான் இப்படி வற்புறுத்துகிறீர்களா ?

திரு. க. சுப்பு : இது முக்கியமான பிரச்னை, அதில் ஒன்றிரண்டு விஷயங்களைக்கூடக் கேட்பதற்கு உரிமையில்லை என்றால் என்ன செய்வது ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள்.

மாண்புமிகு அவை முன்னவர்கள் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்பதால், இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(5) அறிவிப்பு.

நடவடிக்கைக் குறிப்பிலிருந்து சில பகுதிகள் நீக்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கு மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் பயன்படுத்திய சில வார்த்தைகளைப் பொறுத்து பிரச்னையைக் கிளப்பினார்கள். இது சம்பந்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை பார்த்தேன். அவற்றில்...... * * * என்று மொத்தமாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியை மட்டும் நீக்கிவிட வேண்டும் என்று உத்திரவிடுகின்றேன்.

(6) தகவல் கோரல்.

அறிவிப்புக் கொடுக்கப்பட்ட சில தீர்மானங்கள் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் மிக முக்கியமான தீர்மானம் ஒன்றைக் கொடுத்திருந்தேன். காரைக்குடியில் நடைபெற்ற சம்பவம். இது சாதாரணமான காரியம் என்று சொல்லிவிட முடியாது. இதை இன்றைக்கு எடுத்துக்

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.